# வலம்புரி

பக்கங்கள்: நான்கு — Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 09 ஞாயிற்றுக்கிழமை (22.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


## ஊடகவியலாளர் சுட்டுக்கொலை

வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை சுதந்திர ஊடகவியலாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சந்திரபோஸ் சுதாகரன் என்ற ஊடகவியலாளரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இத் தாக்குதலானது ஊடகவியலாளர்கள் மீது நடாத்தப்பட்ட மற்றுமொரு தாக்குதலென சுதந்திர ஊடக மையம் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலை அவ் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதேவேளை சர்வதேச ஊடக நிறுவனங்களின் கருத்துப்படி, ஈராக்கிற்கு அடுத்தபடியாக இலங்கை ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலான நாடாக விளங்குகிறது. (ச-3)

## பயங்கரவாத அமைப்புகளுக்கு ஐ.நா.ஒன்றியம் விளக்கக் கடிதம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள அமைப்புகளுக்கு அந்த அமைப்புகள் பயங்கரவாதப் பட்டியலில் இணைக்கப்பட்டதற்கான காரணத்தை விளக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிபு செய்துள்ளது.

அது தொடர்பான அவ் அமைப்புகளுக்கு விளக்கக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைக்க முடிபு செய்துள்ளது.

லக்ஸம்பேர்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் உள்துறை அமைச்சர்களின் மாநாட்டில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் 50 ற்கும் மேற்பட்ட அமைப்புகளும் குழுக்களும் இணைக்கப்பட்டுள்ளன.

முகவரி இல்லாத அமைப்புகளுக்கு கடிதம் அனுப்ப முடியாது என்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் அவை பற்றிய விபரங்கள் இணைக்கப்பட இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தைத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)

வெலிக்கந்தைப் பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

வெலிக்கந்தை திருகோணமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர். (ச-5)

# சமாதானப் பேச்சுக்கான கதவுகளை அரசாங்கம் திறந்தே வைத்துள்ளது!

## வத்திக்கானில் ஜனாதிபதி தெரிவிப்பு



(வத்திக்கான்)

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காணவே இலங்கை அரசாங்கம் விரும்புகிறது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வத்திக்கான் இராஜாங்க செயலாளர் கர்தினால் டார்சி சியோவிடம் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலைய பொறியியலாளர் சுட்டுக்கொலை

### அமெரிக்கா அதிர்ச்சி

(வாஷிங்டன்)

அமெரிக்க நாசா விண்வெளி ஆய்வு மண்டல வளாகத்தில் வைத்து பொறியியலாளர் ஒருவர் சக ஊழியர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஜோன்னன் என்ற பிரிவுப் பகுதியில் குறித்த துப்பாக்கி நபர், இரு நாசா ஊழியர்களை மிரட்டி பிணைக் கைதிகளாக வைத்திருந்தார்.

பின்னர் பிணைக் கைதிகளாக வைத்திருந்த பொறியியலாளரைச் சுட்டுக் கொன்று விட்டுத் தானும் தற் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகில் இரகசியப் பதுங்குகுழி

### பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான வீடு ஒன்றினுள் பாதுகாப்பான பதுங்குகுழி ஒன்று இரகசியமாக அமைக்கப்பட்டு வந்ததை நீர்கொழும்புப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அயலவர்களின் தகவலை அடுத்து கந்தானைப் பிரிவில் உள்ள டெல்கசன்டியாப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை சோதனையிட்ட பொலிஸார், வீட்டின் அறை ஒன்றினுள் பதுங்குகுழி அமைக்கப்பட்டு வந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த வீட்டின் உரிமையாளர் வவுனியாவைச் சேர்ந்த தமிழர் எனவும் அவர் தனது மனைவி பிள்ளைகளுடன் அருகில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் வீட்டைச் சோதனையிட்ட போது அங்கு யாரும் இருக்கவில்லை எனவும் சந்தேகத்துக்கு இடமான குடும்பம் தப்பிவிட்டது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடு கட்டுநாயக்கா வான்படைத் தளத்தில் இருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் இங்கு இருந்து தளத்தின் மீது தாக்குதலை நடத்தத் திட்டமிட்டு இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-5)

## வத்திக்கான் பிரதிநிதி மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

இலங்கைக்கான வத்திக்கான் பிரதிநிதியான வணக்கத்துக்குரிய மரியோ செனாரி நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்செய்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வத்திக்கான் சென்று புனித பாப்பரசரை சந்தித்துள்ள நிலையில் இந்த விஜயம் நேற்று நடந்துள்ளது.

மட்டக்களப்புக்குச் சென்றுள்ள வத்திக்கான் பிரதிநிதி அங்கு உள்நாட்டு மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள அகதிகளைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.

மனித உரிமைகளை மதித்து இலங்கையில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக பேச வேண்டும் என புனித பாப்பரசர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தமது கட்சி உறுப்பினர்களைக் கைது செய்ய அனுமதிக்க வேண்டாமென ஐ.தே.க. கடிதம்

(கொழும்பு)

ஐ.தே.க.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பின்ர்கள் ஏழுபேர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாமெனத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கில் நேற்று வன்முறை எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வன்முறைகள் காரணமாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஆகக் குறைந்தது 8 பேர் கொல்லப்பட்டும் 5 பேர்வரை காயமடைந்தும் உள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்புப் பகுதியில் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் கிளைமோர்த் தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டும் பொலிஸ் கொமாண்டோ உட்பட 3 பேர் படுகாயமடைந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

அதேவேளை வவுனியாவில் ரோந்து சென்றஇராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்த வந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் நான்குபேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் இராணுவத்தினருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

இதைவிட பொல நறுவைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டும் இரண்டுபேர் காயமடைந்தும் உள்ளனர். குறித்த சம்பவத்திற்கு விடுதலைப்புலிகளே காரணம் என இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

## அகதி முகாமிலுள்ள 26 மாணவர்கள் சித்தி

(சென்னை)

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்து க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய 99 மாணவர்களில் 26 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையைத் தொடர்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாட்டுச் செய்திகள் தெரிவித்தன.

சாதாரண தரப் பரீட்சைக்கு 150 மாணவர்கள் விண்ணப்பித்த போதும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்பட்ட கால தாமதத்தால் 99 மாணவர்களே பரீட்சைக்குத்தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## ஆஸியின் வெற்றி தொடர்கிறது நியூசிலாந்து 215 ஓட்டங்களால் தோல்வி

(ஜமேக்கா)

நியூசிலாந்தை 215 ஓட்டங்களால் வெற்றிபெற்று அவுஸ்திரேலியாவின் வெற்றி தொடர்கிறது. மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் அவுஸ்திரேலியா–நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிப்பொண்டிங் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதிரடி வீரர் மத்யூ ஹைடன் மற்றும் வோட்சனின் சிறப்பான துடுப்பாட்டத்தால் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 348 ஓட்டங்களைப் பெற்றது.

மத்யூ ஹைடன் 103 ஓட்டங்களையும் றிக்கிப்பொண்டிங் 66 ஓட்டங்களையும் வோட்சன் 32 பந்துகளில் 65 ஓட்டங்களையும் கிளாக் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து சார்பாக பிறாங்கிளின் 3 விக்கெட்டுக்களையும் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து 50 ஓவர்களில் 349 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 25.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 215 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் புல்டன் 62 ஓட்டங்களையும் ஸ்ரைரீஸ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பாக பிரேட்ஹொக் 4 விக்கெட்டுக்களையும் தைட் 3 விக்கெட்டுக்களையும் மெக்ராத் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியுடன் உலகக் கிண்ணத் தொடர்களில் 21 போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று அவுஸ்திரேலியாவின் சாதனை தொடர்கிறது. (ச-5)

அனுசரணை:-

PEOPLE'S BANK

குறுகியகால வைப்புக்களுக்கு

மக்கள் வங்கி வழங்கும் விசேட வட்டிவீதம்

மக்கள் வங்கியில் ரூபா 10இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 18 % வட்டியும், ரூபா 100 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினை ஒரு மாதத்திற்கு வைப்பிலிடுபவர்களுக்கு 20% வட்டியும் விசேட வட்டியாக வழங்கப்படவுள்ளது. இச் சலுகை 19.04.2007 இலிருந்து 30.04.2007 வரை மட்டுமே...

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கியிடமிருந்து

## நாளை கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் பதிவு செய்துள்ள பிற மாவட்ட பல்கலைக்கழகங்கள்,கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பயண ஏற்பாடுகள் நாளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிற மாவட்ட பல்கலைக்கழகங்கள்,கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் அன்று காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.புகையிரத நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் க.கேணஷ் அறிவித்துள்ளார்.

அத்துடன் நேற்று பயணம் செய்வதற்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் அனுமதி சீட்டுப் பெற்று பயணத்தினை மேற் கொள்ளாதவர்களும் நாளை பிரயாணம் செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித் துள்ளார். (ச)

## கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெற்றி பெற்ற கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். நேற்று யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் கலாசார குழுக்கூட் டத்தில் இது குறித்துதீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கலந்து ரையாடல் மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவ சுவாமி தலைமையில் நடைபெற்றதுஇதன்போது கௌரவிப்பு நிகழ்வினை மே மாதம் 12 ஆம் திகதி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இந் நிகழ்வுகளினை நடாத்துவதற்குரிய ஏனைய ஒழுங்குகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (ச-3)

கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [ பெருமாள் கோயிலுக்கு அண்மையில் ]

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

- 3 மாத கால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம் Fabric Painting, பூ வேலை, கைவேலை பயிற்சிகள்.
- இருவார கால சாறி பிளவுஸ், பஞ்சாபி, Skirts, Blouses, கவுண், Nighty & Overcoat தைத்தல் (இப்பயிற்சிகளுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை புதிய அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்படும்)
- புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான 6 மாத கால தையல் வகுப்புகள்

சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் :- 29-04-2007
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 30-04-2007

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

NEW YEAR SALE

(ஏப்ரல் மாத முடிவு வரை)




சண்டீவி, சண்நியூஸ்,ஜெயா டீவி, பொதிகை மற்றும் DD Sports, Headlines today, DD News உட்பட 44 சனல்களை DVD Quality உடன் கண்டு களிக்கக்கூடிய Ku band டிஸ் அன்ரனா சிஸ்டம் மற்றும் டிஸ் டீவி பக்கேஜ்கள், கேபிள் டீவி உபகரணங்கள் யாவும் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எமது நிறுவனம் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRC) அனுமதி பெற்ற நிறுவனம்.

Kuband Full System Rs.10,000/= இல் இருந்து...

விபரங்களுக்கு:- SATS-TECH ENGINEERS

இல.182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் (குளப்பிட்டி சேச் அருகில்)

Phone:- 021 222 5908 / 077 7710785

(C-022)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும் இம் மஹோற்சவத்தில் எதிர் வரும் 27 ஆம் திகதி மஞ்சக்காட்சியும் 30 ஆம் திகதி சப்பரக்காட்சியும் மே மாதம் முதலாந் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ச-5)

## அழைப்புக் கட்டளை

(இல. 16- பிரிவு 55 (1))

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

அசோகன் சுதர்சலா
மேற்குத் தெரு
ஊர்காவற்றுறை

வழக்காளி

வழ.இல. ம/வி/47

எதிர்

அருமைநாயகம் அசோகன்
முள்ளி ஒழுங்கை
அரியாலை
யாழ்ப்பாணம்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளார்களாதலினால் உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2007-ம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகிறீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடின் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிடக்கூடிய முகவுரை ஒன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பதிவாளர்


*குறிப்பு* :- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும், 80ஆம் பிராதின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு
இ.சபேசன்
வழக்காளியின்
பதிவுபெற்ற சட்டத்தரணி

பதிவாளர்
2007-ம் ஆண்டு சித்திரை
மாதம் 21 ஆம் திகதி

(840)

உ-சிவமயம்



அரசடிக்காடு கதிர்காமசுவாமி கோயில் காரைநகர் மத்தி

அன்புடையீர்.

காரைநகர் அரசடிக்காடு அருள்மிகு கதிர் காமசுவாமி கோவில் புனருத்தாரணம் செய்ய இறையருள் திருவருள்பாலித்துள்ளது. மேற்படி ஆலய திருப்பணி வேலைகளை சிறப்புறப் பூர்த்தி செய்து நிறைவேற்ற திருப்பணிச் சபை ஒன்றை நிர்மாணிக்கத் தீர்மானித்துள்ளோம்.

அதற்கான பொதுக் கூட்டம் மேற்படி ஆலய முன்றலில் 23 ஆம் திகதி சித்திரை மாதம் 23.04.2007 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

முருகன் அடியவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்.
கதிர்காம சுவாமிகோவில்
பிரதம குருக்கள்

தவறைத் திருத்திக் கொள்ளாமல் அதை ஒப்புக்கொள்வது அல்லது மறுப்பது ஓட்டையை அடைக்காமல் கப்பலில் ஏறும் நீரை இறைப்பதாகும். —அப்துர் ரஹீம்

வலம்புரி

# நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு விதிக்கும் நிபந்தனை

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயாரென அமைச்சர் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற பேச்சு என்பது எதனைக் குறிக்கின்றது என்ற குழப்பத்தால் பொதுமக்கள் தலையை பிய்த்துக்கொள்ளவே செய்வர்.

ஏனெனில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை என்ற சொற்பதம் என்று உயிர்ப்புப் பெற்றதோ அன்றே 'நிபந்தனை' என்ற சொற்பதமும் உயிர்ப்புப் பெற்று விட்டது.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையை இருதரப்பும் காலத்துக்குக் காலம் முன்வைத்தாலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசினால் முன்வைக்கப்படும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையென்பது 2002 ஆம் ஆண்டு அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புபட்டதாகவுள்ளது.

அதாவது, யுத்த நிறுத்த உடன்படிக்கையை விடுத்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பதே அரசினால் கூறப்படும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையாகும்.

இங்குதான் சிக்கல் ஏற்படுகின்றது. இதுவரை காலமும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பது விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்மென்றோ அல்லது யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவம் வெளியேற வேண்டுமென்றோ நிபந்தனை விதிக்காமல் பேசுவதை குறிப்பதாக இருந்தது.

ஆனால் இப்போது அந்நிலைமை மாறி 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை பற்றி எதுவுமே பேசாமல் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே அரச தரப்பின் நிபந்தனையற்ற பேச்சாகும்.

ஆக, இப்போது இலங்கையில் சமாதான விடயத்தில் அனுசரணைப் பணியை வழங்குவோருக்கு தீர்வுகாண முடியாத சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதாவது 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென விடுதலைப்புலிகள் கூறுவதா? அல்லது யுத்த நிறுத்த உடன்படிக்கையை கைவிட்டுவிட்டு பேச வேண்டுமென அரசு கூறுவதா? 'நிபந்தனை' என்ற குழப்பம் அனுசரணைப் பணியாளர்களை சிக்கலுக்குள் மாட்டிவிட்டது.

சுருங்கக்கூறின் நிபந்தனை அற்ற பேச்சு என்ற அரசின் அறிவிப்பிற்குள் ஓர் நிபந்தனை உள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆறு கட்டப்பேச்சுவார்த்தைகளை அரசும் விடுதலைப்புலிகளும் நடத்தியுள்ளனர்.

தற்போது அரசு மாறியிருந்தாலும் விடுதலைப்புலிகளிலும், சமாதான அனுசரணைப் பணியை மேற்கொண்டுள்ள நோர்வேயிலும் எந்த மாற்றமும் இல்லை.

வகுப்பாசிரியர் மாறிவிட்டார் என்பதற்காக மாணவன் மீளவும் பரீட்சை எடுத்து சித்தியடைந்து காட்ட முடியாது.

அதுபோலவே அரசு மாறியதற்காக பேச்சுவார்த்தையின் தொடக்கத்தை மாற்றமுடியாது. எதில் விடப்பட்டதோ அதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டுமென்பதே நிபந்தனையற்ற பேச்சாகும்.

இதைவிட வேறு எதுவும் நிபந்தனையுடனான பேச்சென்றே கூறவேண்டும்.

# மட்டக்களப்பில் இடம் பெயர்ந்துள்ள சிறுவர்கள் ஊட்டச்சத்து இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர்

## யுனிசெப் அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த முகாம்களில் வசிக்கும் ஐந்து வயதுக்குக் குறைந்த 11 ஆயிரத்து 200 சிறுவர்களில் 40 வீதமானவர்கள் ஊட்டச் சத்துக் குறைவானவர்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் சிறார் பாதுகாப்பு அமைப்பான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3-4 வீதமான சிறார்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அதிக ஊட்டச் சத்துள்ள உணவுகளை வழங்குவதற்கு மட்டக்களப்பு சுகாதர அதிகாரிகளுடன் இணைந்து தமது அமைப்பு சிறப்புத்திட்டம் ஒன்றை மேற்கொண்டு வருவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகளினால் திரிபோசா மற்றும் கோன் சோயா பிலென்ட் போன்றன வழங்கப்படுகின்ற போதும் யுனிசெப் அதற்கு மேலதிகமாக பி.பி. 100 என்ற ஊட்டச்சத்து நிறைந்த பால் உணவை வழங்கி வருகின்றது.

உயர் சக்தி மிக்க பிஸ்கட் ஆனது குறைந்தளவான ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக யுனிசெப்பின் ஊட்டச்சத்துக்கான திட்டமிடல் அதிகாரியான மருத்துவர் ரேணுகா ஜெயரிச தெரிவித்துள்ளதாவது;

மட்டக்களப்பிலுள்ள சுகாதார அதிகாரிகளுக்கு நாம் கடந்த வாரம் ஒரு பயிற்சிப்பட்டறையை நடாத்தியிருந்தோம் அவர்கள் விநியோகங்களை செய்பவர்கள். நாங்கள் கடுமையாக மற்றும் ஓரளவு ஊட்டச்சத்து குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள சிறார்களை அடையாளம் கண்டு அது மேலும் மோசமடையாமல் தடுப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம்.

மட்டக்களப்பில் உள்ள முகாம்களில் 5 ஆயிரத்து 600 கர்ப்பிணித் தாய்மாரும், பிள்ளைகளுக்கு பாலூட்டும் தாய்மாரும் உள்ளனர். அவர்களும் மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சிறப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அதிக கலோரிகள் கொண்ட உயர் சக்தி கொண்ட பிஸ்கட்டுக்கள் வழங்கப்படுவதுடன் பாலூட்டும் தாய்மாருக்கு ஆறுமாத காலத்துக்கு ஊட்டச்சத்துள்ள உணவுகள் வழங்கப்படும். இந்தத்திட்டத்தை இந்த வருடத்தின் இறுதிப்பகுதி வரை தொடர்வதற்கு யுனிசெப் திட்டமிட்டுள்ளது என்றார் அவர். (ச-5)

# ஸ்ரீபதி எம்.பியை சந்தித்து ஐ.தே.க.எம்.பிக்கள் பேச்சு

## எதிர்காலத் திட்டம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

அரசாங்க வாகனத்தை தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராட்சியை ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமையிலான குழுவினர் பார்வையிட்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் முற்பகல் விஜயம் செய்த ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, எம்.பிக்களான வஜிர அபயவர்த்தன, ஜோன்சன் பெர்ணான்டோ, மாகாண சபை உறுப்பினர் சுஜீவ சேரசிங்க ஆகியோர் சிறிபதி சூரியாராட்சி எம்.பியுடன் ஒன்றரை மணிநேரம் பேச்சு நடத்தினர்.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறிபதி சூரியாராட்சியின் நலன் குறித்து ஆராய்வதறகாகவே அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

சிறிபதியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பதவி விலக்கப்பட்ட அமைச்சர் சிறிபதி சூரியராட்சி பிணை வழங்கப்படாத நிலையில் தொடர்ந்தும் சிறையில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# வாகனம் செலுத்தும் தகுதியினை சாரதிகள் உறுதிப்படுத்த வேண்டும்

## சுகாதார அமைச்சர் உரை

(கொழும்பு)

மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு சாரதியும் தமது உடல் உள ரீதியான மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு வாகனங்களைச் செலுத்துவதற்கான தகுதி நிலையை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் இல்லாத பட்சத்தில் இவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மீளவும் புதுப்பித்து வழங்க அனுமதியளிக்கப்படாது எனவும் சுகாதார மற்றும் போசனை நலத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனம், உடல் பாதிப்புக்கள் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடற்ற தன்மை என்பவற்றினை காரணமாக இடம்பெறும் வீதி விபத்துக்களினால் அதிகளவிலானோர் மரணிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த சாரதிகள் தமக்கான உடல், உளத் தகுதி தொடர்பான மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்வதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் விசேட பிரிவொன்று உருவாக்கப்படவுள்ளதாகவும் இப் பிரிவின் மூலம் சாரதிகள் உடல், உள தகுதி தொடர்பான மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சகலதுறையைச் சார்ந்த சாரதிகளுக்கும் இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை அவர்கள் அணியாது உதாசீனம் செய்வதாகவும் தாம் செலுத்தும் வாகனங்களை ஒழுங்காக பராமரிப்புச் செய்வதில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# விசாரணையினை துரிதப்படுத்துமாறு தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம் மீதான விசாரணைகளை துரிதப்படுத்தி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புதிய சட்டமா அதிபர் சி.ஆர்.பி.சில்வாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கைதிகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி.க்கள் நேரில் சென்று வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைதிகள் போராட்டத்தை கைவிட்டிருந்தனர்.

தற்போது தமது சட்டத்தரணிகள் மூலமாக புதிய சட்டமா அதிபரிடம் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர். அதே வேளை பூசாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 12 பேர் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்படுவர் எனக் கூறப்பட்ட போதும் அவ்வாறு கைதிகள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவில்லை எனவும் அறியமுடிகிறது. (ச-5)

# வெதுப்பகங்களுக்கான கோதுமை மா கூடிய விலைக்கு விற்கப்படுகின்றது

## பேக்கரி உரிமையாளர்கள் கவலை

வெதுப்பகங்களுக்கான கோதுமை மாவினை சில பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக வெதுப்பக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். பாண் உற்பத்திக்கான கோதுமை மாவினை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வெதுப்பகங்களுக்கு அறிவித்திருந்தார்.

இம் மாவினை வெதுப்பகங்களுக்கு விற்பனை விலையிலும் குறைவான விலைக்கு வழங்குமாறும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவர் அறிவித்திருந்தார். எனினும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சில விற்பனை விலையிலேயே மாவினை தமக்குத் தருவதாக வெதுப்பக உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை வடமராட்சியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்று விற்பனை விலையிலும் குறைவான விலைக்கு வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# உணவுப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

உணவகங்களில் விற்கப்படும் சகல உணவுப் பொருள்களுக்குமான கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் வெகுவிரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் தெரிவித்துள்ளார்.

உணவுப் பண்டங்களின் விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக கலந்துரையாடல் யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் நேற்றுக்காலை 10 மணியளவில் அதன் தலைவர் இ.ஜனக்குமார் தலைமையில் நடைபெற்றது.

அதன்போது உணவுப் பொருள்களுக்கான விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷுடன் கலந்துரையாடப்பட்டு கட்டுப்பாட்டு விலைகள் உணவகங்களுக்கு அறிவிப்பதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை வர்த்தக சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில் உணவுப் பொருள்களின் விலைகள் வருமாறு;

முழுச் சாப்பாடு-60ரூபா, அரைச் சாப்பாடு-40 ரூபா, றோல் ஒன்று-15 ரூபா, வடை-12 ரூபா, பால் ரீ மற்றும் பிலேன்ரி முறையே 14, 6 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்விலை நிர்ணயத்தை உணவக உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. (ச-3,5)

## நன்கொடையை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையினால் வழங்கப்படும் நன்கொடை நிதியினை பெற்றுக் கொள்ளாத சனசமூக நிலையங்கள் தமக்குரிய நிதியினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந் நன்கொடை நிதியினைப் பெற்றுக் கொள்ளாத சனசமூக நிலையங்கள், இயங்காதவை எனக் கருதி பதிவுகள் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ச)

# அகதிகளை ஏற்றிச் செல்ல தமிழக மீனவர்கள் அச்சம்

இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிச்செல்ல படகோட்டிகள் அஞ்சுவதாக அடைக்கலம் தேடி நேற்று முன்தினம் தமிழகம் சென்ற இலங்கையர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளமை, கடலில் மீன் உற்பத்தியாகும் காலம் என்பதனால் கடந்த 15 ஆம் திகதி முதல் விசைப் படகுகள் மீன் பிடியில் ஈடுபடத் தமிழக அரசாங்கம் தடைவிதித்துள்ளமை என்பனவையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடையில்லாத காலங்களில் இந்தியக் கடல் எல்லையில் ஆயிரக் கணக்கான விசைப்படகுகள் மீன்பிடியில் ஈடுபடும். இப் படகுகளுடன் அகதிகளை ஏற்றிய படகுகள் கலந்து தமிழகத்திற்குச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

தமிழக அரசாங்கத்தின் விசைப் படகுகளுக்கான தடை காரணமாக 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இலங்கையிலிருந்துபடகு மூலம் அகதிகள் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கடந்த 16,17,18ம் திகதிகளில் இலங்கையிலிருந்து 25 பேர் விமானம் மூலம் அகதிகளாகத் தமிழகம் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பல நூற்றுக்கணக்கான மக்கள் தமிழகம் செல்வதற்காக பசி, பட்டினியோடு படகுகளிற்காக காடுகளில் காத்திருப்பதாக நேற்று முன்தினம்அங்கு சென்ற அகதிகள் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி குடாக்கரை கந்தசுவாமி ஆலயத்தில் இன்று காலை 6 மணி தொடக்கம் சாவகச்சேரியில் திவ்ய ஜீவன சங்க ஆதரவுடன்திருவாசகமுற்றோதல்நடைபெறும். (ச-102)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி உலோசிட்டி பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சப்பரத்திருவிழாவும் மே மாதம் முதலாம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத்திரு விழாவும் இடம் பெறும். (ச-5)

## பாணின் நிறைகுறைவு பொதுமக்கள் விசனம்

யாழ்.மாவட்ட வெதுப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் பாணின் நிறை குறைவடைந்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாண் ஒன்றின் நிறை 450 கிராமாக இருக்க வேண்டுமென யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்திருந்தார். ஆனால் அதற்குக் குறைவான நிறையிலேயே பாண் உற்பத்தி செய்யப்படுவதாகவும் குறிப்பாக றோஸ் பாணிலேயே நிறைகுறைவடைந்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நிறை குறைவடைந்துள்ளமை தொடர்பாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாணின் நிறை தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகமே கண்காணித்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

# தமது கட்சி உறுப்பினர்களைக் கைது செய்ய...

அத்தநாயக்க, லக்ஷ்மன் செனவிரட்ண, வஜிர அபேயவர்த்தன, ஜோன்ஸன் பெர்னாண்டோ , ரங்கபண்டார , மகிந்த ரத்தின திலக்க, தலதா அத்துக் கோறளை ஆகியோர் மீது அரசாங்கம் பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி சட்ட விரோதமாகக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதுடன், ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒருபோதும் இடம் வழங்க வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசாங்கம் கைது செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தவர்கள் என்பதை அரசாங்கம் இனங்கண்டுள்ளது.

அத்துடன் அரசாங்கத்துடன் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் எதிர்க்கட்சிக்கு வர இருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இவர்களை எதிர்க் கட்சிக்குக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த மேற்படி ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களும் முயற்சிசெய்து வருகின்றார்கள் என்பதைக் காரணம் காட்டி அவர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இன்னும் சில நாள்களில் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை. அத்தோடு ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கையாகும். எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இதர பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொலிஸ் விசாரணைக் குழு விசாரணைக்காகவோ, குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவோ, கைது செய்யப்படவோ சட்டமா அதிபரான உங்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சிப்பார்கள் என்பதால் இந்த சட்ட விரோதமான நடவடிக்கைகள் குறித்து ஏற்கனவே உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பக்கசார்பற்ற நியாயமான அதிகாரியான நீங்கள் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இடம் வழங்கக் கூடாது. நாட்டின் பொறுப்புள்ள எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின்தலைவர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக நாட்டில் தங்களது அரசியல் நடவடிக்கைகளை சட்ட ரீதியாக சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது சகலரினதும் கடப்பாடாகும்.

சட்ட மா அதிபரான நீங்கள் இவ்வாறான ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இடம் வழங்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# சமாதானப் பேச்சுக்கான...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இத்தாலிக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புனித பாப்பரசர் 16-வது ஆசீர்வாதப்பரை வெள்ளிக்கிழமை சந்தித்ததன் பின்னர் இராஜாங்கச் செயலாளருடனான இச் சந்திப்பு இடம்பெற்றது.

இங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது, இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. பேச்சுவார்த்தைக்கான எமது கதவுகள் திறந்தேயிருக்கின்றன.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து விடுதலைப்புலிகள் பின்வாங்கிச் சென்றனர். இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான பல காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள் பற்றாக்குறையைத் தோற்றுவிக்க விடுதலைப் புலிகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அவற்றை எல்லாம் முறியடித்து வடபகுதிக்குத் தேவையான உணவு மற்றும்மருந்து வகைகளை அரசாங்கம் அனுப்பி வருகின்றது.

இத்துடன் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வொன்றைக் காணும்முயற்சியாக சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டுள்ளது. எமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசனைகள்விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்றும் ஜனாதிபதி கூறினார். (ச-5)

# நாசா...

கொலை செய்துகொண்டுள்ளார்.

அவர் தடுத்து வைத்திருந்த மற்றைய பெண் பிணைக் கைதி பாதுகாப்பாக மீட்கப்பட்டார். எதற்காக இச்சம்பவம் இடம்பெறறது என்பது குறித்து எதுவும் தெரியவில்லை என அமெரிக்கப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான கொலைச் சம்பவங்களால் அந் நாடு அதிர்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# பயங்கரவாத அமைப்...

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியல் 6 மாதங்களுக்கு ஒரு தடவை புதுப் பிக்கப்பட வேண்டிய நிலையில், ஈரானின் முஜாஹிதீன் அமைப்பு தொடர்ந்த வழக்கில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு காரணமாக அது புதுப்பிக்கப்படாமல் இருக்கின்றது. இதனால் பயங்கரவாத நடவடிக்கைக ளில் ஈடுபடாது மக்களுக்காகப் போராடும் அமைப்புக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கப் பட முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)


**Hatton National Bank**

**அடகுப் பொருட்களை**

**ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.02.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் 28.04.2007 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

உங்கள் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்

❖ கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒருபகுதியையும் (ரூபா 500/-) செலுத்தி

அல்லது

❖ தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

(c-020) -முகாமையாளர்



புதிய பிரிவுகள் ஆரம்பம்!




CB Computer Academy
Station Road, Kondavil. ☎:-021-4590291



**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
**Ministry of Science and Technology**

MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka. Office : 021 222 3641 Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

**Diploma Courses**
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

**On-Line Classes**
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

**Work shop**
- PC Maintenance & Repairs

**Certificate Courses**
- Ms Word
- Ms Excel
- Ms Access
- CorelDRAW
- Page maker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் 10/05/2007
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் 12/05/2007

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology
-Executive Officer


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.